மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருச்சுழி.

**அசல் வழக்கு எண். 39/2024**

வாதி/பிரதிவாதி சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சியச்சட்டம் 44வது பிரிவு 5ஆவது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.R.கலைச்செல்வி, கிரேடு III என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : ஜமால்பீவி (வா.சா.1) | சாதி : |
| த/பெ.க/பெ : | மதம் : |
| கிராமம் : | தொழில் : |
| தாலுகா : | வயது : |

04.04.2025

**பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை தொடர்ச்சி–**

1. எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியாது. 1ம் பிரதிவாதிக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும். நாங்கள் வாங்கிய சொத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 26 சென்ட் ஆகும். தாவா சொத்தினை கிரையம் வாங்குவதற்கு எவ்வளவு பணம் 1ம் பிரதிவாதிக்கு கொடுத்தேன் என்றால் ரூ.11000/– கொடுத்தேன். வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் சாட்சிகளாக எனது தந்தை சிக்கந்தர் என்பவரும், காதர் இப்ராஹிம் என்பவரும் சாட்சி கையெழுத்து செய்துள்ளனர். அவர்கள் யார் என்றால் முதல் நபர் தெரியும். இரண்டாவது நபரை தெரியாது. இரண்டு சாட்சிகளையும் நான் அழைத்து செல்லவில்லை. 1ம் பிரதிவாதிதான் கிரையம் செய்து கொடுத்தார். கிரைய பத்திரம் பதிவு செய்வதற்கு நான் செல்லவில்லை என்றால் சரிதான். எனது அப்பா அல்லது வேறு யாரு சென்றார்கள் என்றால் எனக்கு தெரியாது.

2. கிரையம் முடித்து 3 நாட்கள் கழித்து பத்திரம் கொடுத்தார்கள். 1ம் பிரதிவாதிக்கு கண்டுகொண்டான் கிராமத்தில் வேறு எங்கெல்லாம் சொத்து உள்ளது என்றால் எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதியிடமிருந்து தாவா சொத்தினை கிரையம் வாங்குவதற்கு முன்பு முறையான வருவாய் ஆவணங்களை பார்த்து கிரையம் பெற்றேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.1ல் நான் கிரையம் பெற்ற சொத்தில் உள்ள தபசிலில் பட்டா எண்.152 மற்றும் சர்வே

எண்.59/3ன் விஸ்தீரணம் 14 செண்ட் என்று உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் சொத்தில் சந்தை மதிப்பு ரூ.1820/- என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். 14 செண்ட் இடத்திற்கு அப்போதைய உள்ள சந்தை மதிப்பு ரூ.1820/- தான் என்றால் எனக்கு அதைபற்றி தெரியாது.

3. நான் 2007ம் வருடம் இந்த வழக்கை தாக்கல் செய்தபோது தாவா சொத்தில் கூரை வீடு மட்டும் இருந்தது என்றும், கதவு எண் ஏற்படவில்லை என்று சொல்லிதான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் கதவு இருந்தது, ஆனால் அதன் எண் எனக்கு தெரியவில்லை. 2007ம் வருடம் கூரை வீட்டிற்கு வீட்டு வரி ரசீது போட்டேனா என்றால் போட்டேன். அந்த வீட்டுவரி ரசீது நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 மூலம் நான் கிரையம் வாங்கின சொத்து 1996ல் 14 செண்ட் இடம்தான் என்றால் சரிதான். வாங்கிய பிறகு 1 வருடம் விவசாயம் செய்தேன். பின்பு வீடு கட்டினேன். எந்த வருடம் வீடு கட்டினேன் என்றால் 1998ல் வீடு கட்டினேன்.

4. விவசாயம் செய்ததற்கு தீர்வை ரசீது எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. தீர்வை ரசீது எதுவும் வழக்கறிஞரிடம் கொடுத்தேனா என்றால் வீட்டுவரி, தண்ணீர் ரசீது, மின்சார ரசீது கொடுத்தேன். மின்சாரம் எப்போது பெறப்பட்டது என்றால் கூரை வீடு கட்டி 1 வருடத்திற்குள் பெற்றேன். மறுபடியும் ஓட்டுவீட்டுக்கு தனி மின்சார இணைப்பு பெற்றேன். மின் இணைப்பு எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ஓட்டுவீடு கட்டிய பிறகுதான் எனக்கும், 1ம் பிரதிவாதிக்கும் பிரச்சனை என்றால் சரிதான். சொத்தின் மதிப்பு கூடியதால் 1ம் பிரதிவாதி என்னிடம் அதிக தொகை வேண்டும் என்று பிரச்சனை செய்தார். மேற்சொன்ன விசயத்தை பிராதில் குறிப்பிட்டு கூறியுள்ளேனா என்றால் அப்போது எனக்கு ஞாபகம் இல்லை.

5. 1ம் பிரதிவாதி 2007ம் வருடம் தான் எழுதி கொடுத்த சொத்தின் சர்வே எண். விஸ்தீரணம் வேறு, ஆனால் நான் அனுபவித்து வரும் சொத்து வேறு

என்று நரிக்குடி காவல்நிலையத்தில் 1ம் பிரதிவாதி புகார் கொடுத்தார் என்றால் சரிதான். ஆனால் காவல் நிலையத்தில் எங்களின் சொத்தை எங்களுக்கு கொடுத்துவிடுங்கள் என்று கூறி அனுப்பினார்கள். நான் கிரையம் வாங்கிய சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. நான் 1ம் பிரதிவாதி கொடுத்த பத்திரத்தை வாங்கி கொண்டேன். எனது அப்பாவிற்கு எழுத படிக்க தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. எனது அப்பாவிற்கு எழுத படிக்க தெரியும், கண்டுகொண்டான்மாணிக்கம் கிராமத்தில் அவர் விபரமான நபர் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதிக்கு ஒரு சொத்தை எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். எனது சொத்தை எழுதிகொடுத்துள்ளார். எந்த வருடம் எழுதி கொடுத்தார் என்றால் தெரியாது. எனக்கு ஞாபகம் இல்லை. அந்த சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்திற்கும், 2ம் பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்திற்கும் நான்கு மால் விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

6. நான் தாக்கல் செய்துள்ள பிராதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான், அதிலுள்ள விபரங்கள் எனக்கு தெரியாது. நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து மட்டும் என்னுடையது, அதிலுள்ள விபரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 சொத்துவரி ரசீது சர்வே எண்.59/3க்கு ஏற்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியவில்லை. வா.சா.ஆ.3 சொத்துவரி ரசீது நான்தான் வரி செலுத்தினேன், ஆனால் எந்த சொத்திற்கு என்று விபரம் தெரியாது. இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு நான்தான் வழக்கறிஞரை சென்று பார்த்தேன். இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு நான்தான் வழக்கறிஞருக்கு விபரம் சொன்னேன். எனது அப்பாதான் வழக்கு தாக்கல் செய்வதற்கு வழக்கறிஞரை பார்த்து விபரம் கூறினார் என்றும், நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

7. வா.சா.ஆ.4 எந்த சொத்திற்கான ரசீது என்று குறிப்பிடப்படவில்லை என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.5 பட்டா எந்த வருடம் வாங்கினேன் என்றால் தெரியாது. பட்டாவில் உள்ள சர்வே எண் விபரம் தெரியாது. 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்த சொத்திற்கான ஆவணத்தை நகல் எடுத்து பார்த்தேனா என்றால் பார்த்தேன், எந்த வருடம் எடுத்து பார்த்தேன் என்றால் எனக்கு தெரியாது. அந்த கிரைய பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அந்த கிரைய பத்திரம் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த சொத்தின் சர்வே எண் தெரியாது. அந்த சொத்தின் விஸ்தீரணம் 26 சென்ட் ஆகும். என்னுடைய 14 சென்ட் இடம் தவிர்த்து 1ம் பிரதிவாதிக்கு 12 சென்ட் இடம் உள்ளது (**சாட்சி தன்னிச்சையாக கூறினார்**). 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த ஆவணத்தை ரத்து செய்வதற்கு நீதிமன்றத்தில் பரிகாரம் கோரியுள்ளேனா என்றால் கோரியுள்ளேன். வா.சா.ஆ.7 ஆக வீட்டுவரி ரசீது தாக்கல் செய்துள்ளேன். அதில் எத்தனை ரசீதுகள் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. மேற்படி வீட்டுவரி ரசீது எந்த வருடம் கட்டினேன் என்றால் எனக்கு அதை பற்றி தெரியாது. வா.சா.ஆ.8ல் உள்ள மின்வரி ரசீதுகளின் கதவு எண் குறிப்பிடப்படவில்லை என்றால் அதுபற்றி தெரியாது. மின்சார இணைப்பின் எண் தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ.9 தண்ணீர்வரி ரசீது 16.11.2010ம் தேதிக்கு கட்டியுள்ளேன் என்றால் தெரியாது. கடைசியா எந்த வருடம் ரசீது கட்டினேன் என்றால் தெரியாது. நீதிமன்றத்தில் எத்தனை ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் தெரியாது.

8. 1ம் பிரதிவாதிக்கு படிப்பறிவு இல்லாததால் எனது தந்தை 1ம் பிரதிவாதியை ஏமாற்றி 14 சென்ட் இடத்திற்கு பதிலாக எழுதிகொடுக்காத 26 சென்ட் இடத்தில் குடியிருந்து கொண்டு பிரச்சனை செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி எனக்கு கிரையம் கொடுத்த இடத்தில் தான் குடியிருந்து வருகிறேன். 1ம் பிரதிவாதி எனக்கு சர்வே எண்.59/3 இடத்தை

கிரையம் செய்து கொடுத்தார், ஆனால் நான் சர்வே எண்.59/8 ல் ஆக்கிரமிப்பு செய்து கொண்டு சட்டத்திற்கு புறம்பாக அனுபவித்து வருகிறேன் என்றால் சரியல்ல. அதனால்தான் சீர்திருத்தம் செய்து தர கோரி 1ம் பிரதிவாதியை தொடர்பு கொள்ளவில்லை என்றால் சரியல்ல. நான் கேட்டேன், அவர்தான் எழுதிதரவில்லை. 1996 ம் வருடம் சர்வே எண்.59/3–ஐ தவிர்த்து 1ம் பிரதிவாதி பெயரில் வேறு எந்த சொத்தும் இல்லை என்றால் சரியல்ல.

9. 1996 ம் வருடம் சர்வே எண்.59/8–க்குரிய சொத்து 1ம் பிரதிவாதி பெயரிலே இல்லை, அதனால் அவர் எனக்கு எழுதிகொடுத்தார் என்று கூறுவது வழக்கிற்காக பொய் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு உரிமை இல்லாத சொத்தை எனக்கு எழுதி கொடுக்க சாத்தியமே இல்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் வறுமையை பயன்படுத்திக்கொண்டு நான் சொத்தினை ஆக்கிரமிப்பு செய்து காலி செய்யவில்லை என்றால் சரியல்ல. எனவே வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.